# மகதலேனா மரியாள்

(குறுங்காவியம்)

## நாவேந்தன்

JAFFNA DIOCESE OF THE CHURCH OF SOUTH INDIA
THAT THEY ALL MAY BE ONE

வெளியீடு :

தென்னிந்திய திருச்சபை
யாழ் ஆதீனம்
வட்டுக்கோட்டை

# என்னுரை

தெய்வீக அருட்டுணர்வினால் ஒருவார காலத்துள் எழுதி முடிக்கப்பெற்றது. பரிசுத்த வேதாகமத்தையும், துணை நூல்கள் பலவற்றையும் ஆராய்ந்து இரவு,பகல் என்ற பேதமின்றி இறையியற் சிந்தனையிற் கனிந்தது, மகதலேனா மரியாள் குறுங்காவியம். கிறிஸ்தவ இறையியலின் வரம்பு மீறப்படாமல், அதே சமயத்தில் கற்பனை வளமும், மகதலேனாவின் இயல்புகளும் பளிச்சிட இதுயாக்கப்பட்டுள்ளது. உலகின் பலமொழிகளிலும் பல நூலாசிரியர்களும், கவிஞர்களும் மகதலேனா மரியாள் பற்றிய கதைகளையும், கவிதைகளையும் புனைந்துள்ளார்கள். பரிசுத்த வேதாகமத்தில் மரியாள் என்ற பெயரைக் கொண்டவர்களாக ஏழுபெண்கள் மிளிருகின்றனர். அந்த எழுவரிலும், ஏன், ஏசு பெருமானின் பன்னிரு சீடர்களிலும் மகதலேனா மரியாள் முதன்மையிடம் பெற்றுத் திகழ்கிறாள். ஆண்டவரின் பேரன்புக் குரியவளாகத் தென்படுகிறாள். இவ்வுண்மையினைப் பரிசுத்த வேதாகமம் யோவான் *20:11-19* லூக்கா *7:36-50*, மாற்கு *15:47- 16:9*, மத்தேயு *28:1,9* நற்செய்தி நூல்களின் வாக்கியங்களிலும், பிற பகுதிகளிலும் படித்துணரலாம்.

பெரும்பாலான இறையியலாளர்களும், நூலாசிரியர்களும் மகதலேனா மரியாள் ஆரம்பகாலத்தில் பாவவாழ்க் கையில் ஈடுபட்டிருந்து, ஒரு இக்கட்டான சூழ்நிலையில் இயேசு பெருமானின் அதீத கருணையினால் மீட்கப்பட்டவள் என்றும் அதன்பின் முற்றிலும் மனமாற்றமடைந்தவளாய் இயேசு பிரானையே இரட்சகராகக் கொண்டு, அவர் பின்னே சென்று புனிதையாக வாழ்ந்தாள் என்றும் கருதுகின்றனர். மிகச்சிலரே மகதலேனா மரியாள் 'பாவவாழ்க்கையில்' ஈடுபடாதவள், ஏசுபெருமானால் அவளைபிடித்திருந்த ஏழு பிசாசுகள் துரத்தப்பட்டதன் பின்னர் குணமடைந்து, ஆண்டவரைப் பின்பற்றியவள் என்று வருணிக்கின்றனர். என்னைப் பொறுத்த வரையில் முதற் சாராரது

கருத்தையேயானும் கொண்டுள்ளேன். எவ்வாராயினுமாகுக. மகதலேனா மரியாள் ஆண்டவர் இயேசுபிரானது பேரன்புக்கு பாத்திரமானவள். சிலுவை மரணத்தின் பின் உயிர்த்தெழுந்த போது முதன் முதலாகத் தம்மைத் தரிசனம் செய்யும் பேற்றினை மகதலேனா மரியாளுக்கே வழங்கினார். சிலுவை மரணத்தின் பின் இயேசு பிரானின் மூத்த சீடர்களே 'எல்லாம் முடிந்து விட்டது' என்று கருதிய போதும், மகதலேனா மரியாள் ஒருத்தியே ஆண்டவர் மீண்டும் உயிர்த்தெழுவார் என்ற திடமான நம்பிக்கையுடன் கல்லறையைக் காத்து நின்றாள். அவள் பக்தி ஈடிணையற்றது. ஒருகால் வேதாந்திகள் உயிர்களனைத்தையும் மகதலேனா மரியாள்களாகவும், இறைவன் அவர்களை வெவ்வேறு வழிகளில் ஆட்கொண்டு புத்துயிரளிப்பதாகவும் கருதுவது கூட இதற்குப் பொருத்தமாகலாம். மகதலேனா மரியாள் பரிசுத்த வேதாகமம் புதிய ஏற்பாட்டின் காவியநாயகி பாத்திரம் பெறுவபதை பெருமையுடன் ஏற்றுக்கொள்வோமாக, படித்து இன்புறுவோமாக.

—நாவேந்தன்

# குடிசையிற் பூத்த குறிஞ்சி

(01)

பூங்கொடிபோல்வாள், ஏழ்மைப்
புயலினாற் சாம்பலுற்றாள்
தேங்கிய வறுமையின்றி னேறோர்
தேட்டமே சிறிதுமில்லாள்,
ஏங்கிய தந்தை தாயார்
இளமையில் இயற்கை யெய்த
வீங்கினாள் துயர வெந்தீ
விசும்பினாள் உதவியின்றி....!

(02)

மாந்தளிர்மேனி மங்கை
மரகதப் பதுமையாகப்
பூந்தளிர்போல நாளும்
பொலிவுற வளர்ந்து வந்தாள்
ஏந்தெழில் கண்டெல்லாரும்
இயலுமாறுதவி செய்தார்
காந்தள் மென்கரங்கள் சேப்பக்
கன்னியும் பருவமுற்றாள்....!

(03)

குடிசையிற் பிறந்தாள் நங்கை
குதூகலிக்கும் வாழ்வு
துடியிடையாட்கோர் போதும்
துய்த்திட முடியவில்லை
அடிமையைப் போலப்பன்னாள்
அவதியுற்றிட்டாள் வாழ(ப்)
படிபிசையாரே, ஏழைப்
பாமரர்க்குதவுவார்கள் ?

(04) காலம் ஓர் சிற்பி யாவான்
கைகொண்டு 'ஜாலஞ்' செய்வான்
ஏலத்தில் அவன் சிற் பங்கள்
எவ்வளவுக்கும் போதும்
ஞாலத்தில் இந்த உண்மை
நடப்பது எந்த நாளும்
சாலும் என் றுரைப்பதற்கோர்
சான்றானாள் மகதலேனா......!

(05) ஏழ்மையைத் துரத்தி விட்டு
எழிலுக்கோர் எழிலாய்நின்ற
தாழ்குழல் மகதலேனா
தண்ணியலவனையளானாள்
வாழ்வுக்கு வறுமையாலே
வருந்தி நின்றவளைப் பார்த்து
'ஊழ்' ஒரு பக்கஞ் சேர்ந்து
ஒண்ணனை செய்து நின்றான்....!

(06) பழுதிலா வாழ்க்கை யெல்லாம்
பணம் படைத்தவர்கள் பக்கம்
தொழுது நின்றழைக்குமென் று
'தோத்தரிப்பவர்கள்' கூட்டம்
பொழுதொரு நியாயஞ்சொல்லும்
புன்னகை பூத்துநிற்கும்;
அழுது நின்றயர்வார் தம்மை
ஆதரித்தணைப்பார் யாரே.....!

(07) மாவின்வடுவகிரன்ன கண்ணாள்
மதன்விடு வெங்கணையாகி வந்தாள்
பூவின் அழகிதழ் பூத்துநின்றாள்
பொற்சிலைபோல நடைபயின்றாள்
காவினயலிடை வண்டுகள் போற்
காளையர் கன்னியை நாடலுற்றார்
தூவியலன்னத்தைத்தான் பழிக்கும்
தோற்றத்திலேயேவள் துள்ளிவந்தாள்....!

(08) கன்னியதரங்கள் பொன்சிவப்பு
கண்களோ வேல்களோ யாரறிவார்
மின்னிடை நொந்திடும் என்றயர்வார்
மேகலையார்த்திடப் பின்நடப்பார்
சென்னிமிசை யவள்பாதமலர்
சேர்த்து வணங்கிடத்தான் துணிந்தார்
அன்னமும் நாணுமிம் மென்னடைக்கு
அன்னவர் கற்பனை இவ்வளவோ.....?

(09) விம்மிடும் மென்தனபாரத்தினை
இவள் மேனிதா னெங்ஙனத் தாங்கிடுமோ
நம்மிலெவர்க்கவள் நல்கிடுவாள்
நம்பியவற்றைத் தழுவுவதற்கே
வெம்மை மிகுந்தது காளையர்க்கு
மேனிசிவந்தது கன்னியற்கு
கொம்மை முலையினாள் குடிசையிலே
மாரன் கொடியையுயர்த்தின கோலமிது!

(10) சின்னஞ் சிறுமியாய் வாழ்கையிலே
சீவனோபாயம் எதுவுமின்றிக்
கன்னங்கள் ஒட்டி உடல் கருகிக்
கால்கள் தள்ளாடிட வாடியவள்
பொன்னகை பூணாத தாரகையாய்ப்
பூத்து மலர்ந்திட்ட வேளையிலே
என்னென்ன மாயங்கள் செய்கின்றாள்
என்றவர் எத்தனை ஆயிரவர்.....?

---

(11) பஞ்சணை மெல்லணை தான்தருவார்
பாகொடுதேன் கலந்தே தருவார்
நெஞ்ச மெனக்கு நீதந்து விட்டால்
இந்நீணில மேயுனக் கென்னுரைப்பார்
வஞ்சியவற்றினைப் பார்த்தயர்ந்தாள்
வறுமையிற்காய்ந்ததை நெட்டுயிர்த்தாள்
கொஞ்சுதலுக்கொரு கோடியென்றாள்
கோமகர்தாமும் பின்னே நடந்தார்....!

(12) ஆகம் முழுதும் பொன்னாகியதோ
ஆடவர் நெஞ்சடைவாகியதோ
தாகம் மிகக்கொண்ட காதலர்கள்
அவன் தாள்பணிந் தேத்தத் தயங்கவில்லை
போகக் கலைக்கிவள் போலொருத்தி
இப்பூவுலகிற் பிறிதாருளரோ...
மோகம் மிகுந்த மனத்தினராயவர்
மொய்குழல் வாசலைக் காத்திருந்தார்!

(13) உண்பதைவிட்ட வரெத்தனைபேர்
ஒண்டொடி தன்னையுளமிருத்தி
கொண்டவள் தம்மைவிட்டவள் பின்
கோடிபொன் தந்தவரெத்தனைபேர்
மண்டுபுகழினை விட்டவராய்
அம்மாதினழகில் மயங்கினராய்க்
கண்டதெலாமவள் காட்சியதே
காமனவர்களைக்தாய் ந்தனமயால் !

(14) பொற்கொடி சற்றேனும் நாணவில்லை
பொன்னும் பொருளும் சேர்ந்தமையால்
சிற்றடி வைத்தவள் வந்துவிட்டால்
மேனிசிலிர்த்திட எத்தனைபேர் வருவார்
கற்றதனால் வந்தது என்ன பயன்
இக்கன்னி நலத்தினைக் காண்கிலமேல்
முற்றுந்துறந்தவர் கூட அந்த
'மோகினி' வாசல் தவமிருந்தார்.....!

(15) ஆடும்மயிலனைப் போல நின்றாள்
அன்னம் நடையைப் பழித்துவென்றாள்
பாடும்புலவர்கள் கற்பனைக்கு
ஒரு பாவையிவளெனப் பார்த்துவந்தாள்
ஓடும் மடப்பிடியாகி நின்றாள்
உணர்வுள்ளவர் சித்தமுருக்கி நின்றாள்
கூடுதற்காயவள் பொன்னுடலைக்
கோடி கொடுத்துத் தவமிருந்தார்.....!

# மகதலேனா மரியாள் உயிர்பெற்றமை!

(16) ஆற்றாமை கொண்டார் ஆண்டவர் மீதவர்கள்
போற்றாதன செய்து புதுப்பாதை சமைக்கின்றீர் "

(17) மோசேமுதல் முன்னோர் மொழிந்த தடம்மாறிக்
கூசாது புதுமொழிகள் கூறுகிறீர் அகந்தையினால்,

(18) பல்லாயிர மாண்டு பயின்று வரும் தவ நெறியை
எல்லோரும் ஏற்ற ஏகோவா திருப்பாதை.....

(19) செல்பவரை மறித்து நீர் செப்பும் புதுவேதம்
நல்லதென்று நம்புதற்கு நாங்களென்னமூடர்களா.....?

(20) பரிசேயர், சதுசேயர், வேதபாரகர் பரிவாரம்
எரிசரமாய் இயேசுபிரான் எழுந்திருக்குமிடம்வந்து

(21) குற்றம் பிடித்துக் கொலை செய்யும் நோக்கோடு
முற்றும் துறந்த எங்கள் முன்னோனின்முக நோக்கி

(22) 'பாரும் ரபி, இவளோர் பரத்தை விபசாரத்தில்
சேரும் பொழுதெம் மாற்சிறைப்பட்டாள்; கொண்டுவந்தோம்!

(23) பாவியிவளுக்குப் பரிசு கொலைத் தண்டணையாம்
ஆவி துறக்கும் வரை கல்லால் அடித்துக்கொலை செய்ய

(24) நியாயப் பிரமாணம் நிச்சயித்துச் சொல்கிறது
ஆயதால் நீரென்ன அபிப்பிராயப்படுகின்றீர்? "

(25) 'சொல்லுங்கள்' என்றவரைச் சோதிக்கும்படியாக
'வில்லங்கப்படுத்தி ' வினாவெழுப்பி நின்றார்கள்!

(26) ஐயன் திருவதனம் அலர்ந்த செந்தாமரைபோல்
கையறு நிலைக்கான கன்னி மகதலேனாவை

(27) உள்ளத்தொருகால் உணர்ந்தும்தெரியார் போல்
மெள்ளத்தரையில் தம்வி ரலாற் கோலமிட்டார் .....

(28) தரையில் ஏழுதுகின்ற தன்னிகரில் பெம்மானை 'விரைவினிலே
சொல்லுங்கள், விலைமகட்குத் தண்டனையை.....'

(29) ஆர்ப்பரித்தார் அவர்கள் அண்ணல் திருக்கருத்தை
சூர்த்தறியும் கொள்கை கொஞ்சமுமில்லாதவர்கள்..

{30} மகதலேனா மரியாட்கும், மன்னர் இயேசு பிரானுக்கும்
செகமறிய அவமதிப்புச் செய்து, தங்கொலை வெறியை

(31) காட்டத்துணிந்து நின்ற கயவர் தங்கட்டுரையால்
பூட்டிவைக்கத் தகுந்தபொருளாமோ? "ஏசுபிரான்.....!',

(32) 'ஓயாதவர் எழுப்பும் ஓலத்தைச் செவிமடுத்து
காயாது மெல்லக் கனிவாய் திறந்தமிழ்தம்

(33) சிந்தினாற் போலச் செப்பினார் ஏசுபிரான்
நொந்தோரெல் லோருமந்நொடியே பவமகன்றார்,

(34) 'பாவியிவள் என்றீர், பரத்தை என்றீர் உ(ம்) மிற்
பாவமிழையாதோன் முதற்கல்லை, வீசுக இவள்மீதென்றார்',

(35) அத்துனுரைகேட்டார், அதிர்ந்தார் அனைவருமே
பொத்தென்றவர் பொய்ம்மை, பொால்லாங்குதலை விரிப்ப

(36) ஒவ்வொருவராய் அகன்றார் ஒளியிருந்த இடம் நீங்கிக்
கொவ்வைக்கனியிதழாள் கொலையிருந்து மீண்டனளால்!

(37) தன்னந்தனி நின்றாள், தண்ணருளின் பொன்முகத்தைச்
சென்னிவணங்கச் சிந்தைகள் கூரப்........

(38) பார்த்து நின்றாள் அவளும், பரமன் திருக்குமரன்
நேர்த்தியாய்த் தலைநிமிர்த்தி, நேசமுடன் நோக்கி

(39) " ஆரணங்கே உன்மீது ஆவிதுறக்கும்வரை
'காரணங்காட்டாதே' கல்லடித்துக் கொல்லவென

(40) வந்தவரே விபசாரர் மறுவார்த்தை பேசாது
முந்தினார் தம்இல்லம் முடிந்ததா ; எவரேனும்.

(41) இங்குளரா, தண்டனையை எடுத்துனக்குத்தருதற்கு ?
பொங்கும் மகிழ்வுடனீசன் புன்முறுவல் பூத்திட்டார்

(42) மகதலேனாமரியாள் மகிழ்ச்சியாற் பூரித்தாள் அகமும் முகமும்
மலர 'ஆண்டவரே, ஆருமிலர்' என்றுரைத்தாள்

(43) "மானனையாய் உன்றன் மனதையறிந்திட்டேன்,
ஆனதினால் இனிநீயும் பாவச் சேறழுந்தாதே......

(44) இங்கிருந்து செல்வாய், இனிப்பாவஞ் செய்யாதே,
பொங்குங்கருணைவிழி சொரியப் 'போ' என்றார் ! "

(45) வலைப்பட்ட மான்போலும், கொலைஞர்கைவாள்
நிலைப்பட்ட உயிர்போலும் ஏங்கிவந்தாள்.....!

(46) அண்ணலின் திருமுகத்தைப்பார்த்தாள் ; அருள் சொரியும்
கண்ணினை கண்டாள், தன் கடைநிலையை

(47) எண்ணினாள், எண்ணி அழுதாள், இருவிழிகள்
விண்ணிருந்து வீழும் மழையாய்ச் சொரிந்தனவால் !

(48) செய்திட்டப் பாவச்செயிர் தீர்ந்தாள், அழுதழுது
எய்திட்ட துன்ப இருள்நீங்கிப் பூரித்தாள் !

(49) புண்ணியரின் பொன்மேனி , கருணை முகம்
நண்ணிரைக் காக்கும் நல்லாயன் தோற்றத்தை

(50) இயத்தே ஏற்றாள்,'இன்று முதல் உடல் விற்கும்
'பதநீத்தேன்' என்றுள்ளம் பரிதவித்துச் சேவித்தாள் '

(51) ஐயன் இதனை முதலேயறிந்திட்டார் மகதலேனா
நேயமுடன் ஏசுபிரான் நினைவினிலே புனிதமுற்றாள்

(52) பாரோரறியவில்லை, பரிசேயர், வேதபாரகர்
யாரேனுமறியவில்லை இயேசண்ணலே ஈதறிந்தார்

(53) மரியாளறிந்தாள் மன்னிப்பின் மகத்துவத்தைத்
தரியாது இயேசுபிரான் தஞ்சமெனச் சரணடைந்தாள்.

(54) ஆலயங்கள் தோறும், ஆற்றங்கரை தோறும்
மலை முகட்டின் மீதும் மன்னவனாம் இயேசுபிரான்

(55) அருட்பொழிவு செய்யும் அனைத்து இடங்களிலும்
திருமகளாய் மகதலேனா சீர்திருந்தி முன்னின்றாள்

(56) பாவிகளை மீட்கப் பரமபதம் விட்டிறங்கிச்
சாவினையே ஏற்பதற்குச் சந்தோஷமாய் வந்த

(57) மீட்பரின் பின்னே மேவினாள் மரியாளும்
ஆட்கொண்டதிறனை அனுபவித்தாருள்ளத்தில்

(58) சொத்துச்சுகம் துறந்தாள், சொல்லிளமைநீத்தவளாய்
முத்திநிலை பெற்றுயர்ந்த முனிவர் நிலை பெற்றிட்டாள்.

(59) பாதகர்க்கு மத்தியிலே பரமன்திருக்குமரன்
சாதனைகள் செய்யும் சங்கதிகள் தெரியாமல்

(60) சோதனையிலே வெற்றி சுமந்தாள் மரியாளும்
வேதனையிலேயன்றோ விடிவு பிறக்கிறது !

(61) ஒளியை இருள் ஒருபோதும் ஒட்டாது
களிமிகவே வந்தவர் எல்லாரும் வரம் பெற்றோர்

(62) " ஒளி நானிவ்வுலகுக்கு என்றுரைத்தார் ஏசுபிரான்
துளியேனும் இருளென்னைத் தொடர்வோரைத் தொடராது

(63) பாவத்திலுள்ளார்க்குப் பரிகாரம் நானேதான்
ஆபத்தில் உதவும் ஆண்டவனும் நானேதான்

(64) எந்தையைக் காண்பார் என்னையே காண்பவர்கள்
மந்தையைக் காக்கும் மாமேய்ப்பன் நானேதான் "

(65) என்றுரைத்த பின்னும் இரும்பு மனத்தினராற்
சென்றடையாத விடம் சென்றிட்டாரருள் வள்ளல் !

# மகதலேனா மரியாள் மனமாற்றம்

(66) பத்தி நெறியறியாத பதிதரொடும் திரிவேனை
சத்தியமே வாழ்வாகச் சாதித்த இறைமகனை
கெத்சமனே தோட்டத்தில் கிருபையொளி கிளர்ந்தாரை
எத்தனை நாட்பிரிந்திருப்பேன் இன்னருளின் கோமானை!

(67) ஊனரொடும், குருடரொடும், ஒன்றுமிலார் தம்மோடும்
ஈனரொடும், செவிடரோடும், இடருள்ள ஊமரொடும்
வானவர்கோமகன் வந்து, வாய்திறந்தேய முதமொழி
தேனினிமை வழிந்தோடச் செப்புதிருவாசகங்கள்.

(68) கேட்டிருந்தும் கீழ் மகளாய்க்கெட்டிருந்த நாயேனைப்
பாட்டிசைத்தும், பட்டிசைத்தும் பரத்தையெனப் பட்டவளை
கட்டி வந்து கொலை செய்யக் குறிவைத்த பரிசேயர்
ஒட்டமுறச் செய்தெனக்கு உயிர்ப்பிச்சை ஈந்தவரை

(69) குடிசையிடைப் பிறந்துபினர்க்கோடி பொருளீட்டிநிதம்
துடியிடையாலாடவரைத்துன்மார்க்கத் தெயிழுத்து
கொடியுடலாலின்பவெறிகொட்டியவர் குணமழித்துப்
படியின்மிசைப்பாதகமே பண்ணியவோர் பரத்தையினை.

(70) வண்டுகள் போல் மொய்த்தென்றன் அலர்மேனிபுளகமுற
உண்டுகளித்தேயின்பம் உறிஞ்சிய காமுகர் கூட்டம்
பண்டிருந்தாள் இவளல்லள், பரத்தையிவள் தானுமலள்
மொண்டுகொண்டாள் பேரின்பம் எனமொழியச் செய்தாரை

(71) கொந்தலரும் கூந்தலிலே கொப்பளிக்கும் நறுமணமே
எந்தமக்கு இன்பவெறி எப்பொழுதும் ஈந்துவிடும்
வந்தென்னை நச்சியவர் வாயாரப் போற்றிடுவார்
முந்து வினைப் பயனோ நான் 'மூழ்நரகில்' வீழ்ந்ததுவே!

(72) தந்தையிலேன், தாயுமிலேன் தண்ணருளைத் தானறியேன்
வந்தவுரைப் பொருளாக்கி வளமாகவாழ்ந்திருந்தேன்
செந்தழலாய்க்காமத்தீ செறியச் செய்தாடவரைப்
பந்தாடிக் களித்திட்டேன் பரத்தையெனப் பெயர்பெற்றேன்.

(73) எம்பெருமான் இயேசுபிரான் இயற்றுகிற அற்புதங்கள்
நம்பியவள் நாளல்லள், நச்சியவர் உடலின்பம்
கும்மிருட்டு வேளையிலும், குளிர்நிலவின் ஒளியினிலும்
வம்பவிழும் மலர்மஞ்சம் மருவியிருந்தலுத்தேனை......!

(74) தேவர்பிரான் முன்னேயோர் திருக்காட்சி பெறுதற்கே
பாவமுடையாளிவளென்று பரிசேயர் கொணர்ந்தனரோ
ஆவலுடன் தேவசுதன் அருள்விழிகள் கண்டவுடன்
போவது என்பாவ மெனப்பொழிந்தது கண்ணீரருவி !

(75) ஆரணனும் பூரணனும் அனைத்துலகுந்தானானான்
பூரணமாய் மனுதிவுருப் போந்தென்னைக் காத்தருளி
தாரகமாய்ச் சொன்னவுரை 'இனிப்பாவஞ் செய்யாதே '
சீரவர்க்குச் சேர்க்காமற் செய்நன்றி மறப்பேனோ?

(76) இன்றுமுதல் நானவரின் இணைமலர்த்தாட் தூசியினை
ஒன்றுதற்கும் உரிமையிலேன் உயிரெனக்குத் தந்தாரை
துன்றுபவப் பிணிபோக்கித்தூய்மை செய்து மானிடத்தை
நன்று செய்வந்தாரை , நண்ணி நின்றே பணி செய்வேன் !

(77) ஒப்பரிகைமீதனிலும், உயருச்சி மலையினிலும்
செப்பிடும் நல்வாசகங்கள் தேவர்பிரான் திருவாக்கு
தப்புதற்குத் தீ நெறியைத் தடுத்தாள வந்தாரை
எப்படித்தான் ஏத்துவனோ என்னுயிரின் உயிரானை !

(78) இளமையதும் இன்பமதும் ஏற்றுகிற போதையதும்
களர்நிலத்துப் பயிராகக் காலத்தால் மாண்டுவிடும்
உளதென்ற எல்லாமே ஓர் நொடியில் மறைந்துவிடும்
தளர்வில்லா முழுமுதலோன் தரினமே எமை காக்கும்

(79) பெண்குலத்தின் பேரிழுக்காய் வாழ்ந்தது என்பேதமையே
அண்ணலவன் கண்திறந்தான் அடியிணைகள் சரணானேன்
விண்ணுலகப் பேரின்பம் விழிமலராற்றந்தானைப்
எண்ணியெண்ணிப் பூரிப்பேன் இன்று முதலவன்றாளே !

# சீமோன் வீட்டுவிருந்து

(80) சீமோன் பெருஞ்செல்வன்; பரிசேயன்
அன்னான் ஒருநாள் ஆண்டவர்தம்மிடம்
வாமாறுமையழைத்தேன், வளமார் விருந்திற்கு
என்றனன்; ஏசுவும் ஏற்றாரதனை !

(81) மாபெரும் மாளிகை மதில்புடைசூழப்
பேரணி விளக்கங்கள் பிறங்கிடம் இதுவாம்;
காவலன் இயேசு கனிந்த சிந்தையில்
ஆவலோடன்னான் அகமது வந்தார் !

(82) சீடர்கள் வந்தனர், சிநேகிதர் வந்தனர்
ஆடவர் மகளிரும் ஆங்கேயிருந்தனர்
பாடகர், நாடக நடிகர், பல்லோரும்
கூடியிருந்தனர், குதூகலம் விரவ !

(83) பணியாள் பலரும் பதைபதைத்தோடி
விருந்திற்காவன விரைந்து செய்தனர்
மணியொளிர் முத்துக்கள் மணமலர்மாலைகள்
அணியணியாக ஆங்குநிறைந்தன.

(84) செல்வன் சீமோன் செய்திடும் விருந்து
எல்லாவற்றாலும் இனிமையுறவே
பல்லாற்றானும் பணிவிடையாளர்
முன்னே வந்து முயன்று நின்றனர்.

(85) ஆண்டவர் இயேசு ஆங்குறும்போது
காலணி யகற்றிக்காலும் விரிப்பில்
மாண்புடன் அமர்ந்தார் மனமகிழ்வோடு
நீண்டதங்கரங்கள் நிலமிசைதோய.

(86) பத்தி செய்பவரெனிற் பரமன் பாதம்
சுத்திசெய்து, சுகந்தம் தடவுவர்
'வித்தகன்' சீமோன் வீணேயிருந்தான்
விரைமலர்ப் பாதம் வெறிதேயிருப்ப !

(87) அண்ணல்மேனி அவன் தொடவில்லை
சுகந்தத்தைலம் பூசவுமில்லை
கண்ணகன் ஞாலம் கடவுளாய்க் கொள்ளும்
விண்ணவனிருப்பவும் சீமோன் 'சிரித்தான்!'

(88) பரிவு அவனுக்குண்டு பரிசேயன்றான்
எனினும், ஏசுவை ஏனோ சிநேகித்தான்
உரிமையோ டென்றும் 'ரபீ' எனவழைத்து
உறவு கொண்டாடும் ஒருவன் அவனும் !

(89) எழில்மனை, சுற்றம், ஏற்றம்
இலங்கெழிற்றீபம் முற்றும்
பொழில் மிகு மாடந்தோறும்
பொலிந்திடுமழகின் தேக்கம்.

(90) கார்முகில் வந்து தங்கும் ககனத்தை
அளாவும் மாடம்
சேர் அகிற் புகையுலாவிச்
சிந்தையை மயக்கும் வாசம் !

(91) ஏந்தலாம் ஏசு தம்மோடெழுந்தவர்
குழாங்கள் சூழப்
போந்தனர் விருந்துண்பாராய்ப்
புளசித்தான் சீமோன்தானும் !

(92) பல்வகை உண்டிகள், பழங்கள், ரசங்கள்
தாராளமாகத் தந்தனன் சீமோன்
'நல்ல விருந்து, நல்ல விருந்தென'
நவின்றனர் ஆங்கு நண்ணினர் பலரும் !

(93) அற்புதங்கள் பல செய்யும்
அண்ணலார் அவ்விருந்தில்
முற்றும்மன மகிழ்ந்தவர் போல் முக
மலர்த்தாமரை சிவப்ப

(94) சீமோனுடனுமவன், செல்வமனையாருடனும்
பேசிக்களித்தும் பிறிதொருவராயிருந்தார்
போமோ திருக்குமரன் பூவுலக விளையாட்டு
சாதாரணமனிதனாகவே சார்ந்திருந்தார்

(95) வேதத்தின் உட்பொருளாய்
விளங்குபவன்; வீட்டினிலே
போதத்துடனிருந்தும்
புரியவில்லை சீமோன் !

(96) நாதத்தின் இன்னிசையைச்
செவிநலமற்றார் கேட்பாரோ
காதற் பொருட் செல்வம்
காமுற்றார் ஏதறிவார்?

(97) வானத்திருக்குமரன்
வந்தனைந்த மாளிகையில்
மோனத் தவம் மலரும்
முத்தி நிலை நிலவியதால் .......

(98) மண்ணகமும் விண்ணகமும்
மலர்ந்திருந்த வேளையிலே
பெண்ணொருத்தி தன்னுள்ளத்தில்
பெருகிய(து) பேரானந்தமே !

(99) எங்குற்றார் என் ஏந்தல்,
ஏசுபிரான் என்தெய்வம்
கங்குல் பகலென்னைக்
காக்கும் அருட்சோதி !

(100) என்றவன் தானெழுந்து
எழிற் சீமோன் மனைபுகுந்து
மன்னனென் ஏசுபிரான்
மலர்ப்பாதம் பணிவனென....!

(101) மின்னலை இடையாய்க் கொண்டாள்
மேனியோ தங்கம் தோற்கும்
கன்னலைப் பழிக்குஞ் சொல்லாள்
காடெனுங் கூந்தல் பூண்டாள்

(102) மாதுளை நிகர்த்த பற்கள்
மதிமுகம், திமிர்த்த கொங்கை
போதெனும் மலர்ப்பாதங்கள்
புலிவிழி நிகர்த்த கண்கள்.

(103) மாரனின் வில்லே போன்றாள்
மதன்கணையவளின் பார்வை
ஆரவள் அழகு தேர்வார்...
ஆண்டவர், அடிமையானாள் !

(104) முன்னைய காலமென்றால்
முகிழ்த்திடு காமநோய்க்குப்
பொன்மழை சொரிந்து நிற்பர்
போதையில் மிதந்து நிற்போர் !

(105) காந்தளாம் கரங்கள் சேர்த்து
கர்த்தரைத் தொழுதுகொள்வாள்;
மாந்தளிர் மேனி கண்டு
மயங்கிடார் யாரேயம்மா

(106) செந்துவர் பவளச் செவ்வாய்
சிரிப்பினில் உலகம் சாகும்
முந்துயர் மார்பின் வீக்கம்
'முனிவரும்' தவறுவார்கள் !

(107) அன்னவள் நடையைக் கண்டு
அன்னமும் அயர்ந்து போகும்
பின்னவள் தோற்றங்காணிற்
பித்தராய்ப் போவர் மாந்தர்.

(108) தடங்கடற் பரப்பின் மிக்க
தன்மையதல்குல் என்றல்
உடம்பெடுத்தென்னோ பெற்றோம்
அன்னாள் உறவினைப் பெற்றிலேமால் !

(109) மானிடந்தன்னைப் பெற்ற
வனப்பினால் மயக்குவாளை
என்னினும் கூடவில்லை,
என்றகம் வருந்துவாரை .....

(110) மனிதரென்றெண்ணாள், புனிதை
மரியாளாய் மாறிநின்றாள்;
இனியெனக்கீசன் இயேசு
ஏந்தலே என்று சென்றாள்;

(111) மாமனை புகுந்தாள் சீமோன்
மனையலங்காரங் கண்டாள்
காமனை வென்ற சீர்த்திக்
கன்னிகை மரியாளின்று ...

(112) இறைமகன் இருந்த கோவில்
எய்திய போது அந்த
நறை கமழ் வாசமெங்கும்
நண்ணிய தன்மை கண்டாள்

(113) மரியாளின் கண்கள் இயேசு
மலர்மதி வதனங்காணப்
பரிசேயன் சீமோன் பார்த்துப்
பரிதவிப்புளத்தே கொண்டான்

(114) பாவியாம் இந்தப் பெண்ஏன்
பரமனின் புதல்வன் பாங்கர்
மேவினாள் என்ற கேள்வி
மீதுற மௌனமானான் !

(115) எதையும் சட்டை செய்யா(து)
இறைமகன் பாதம் நண்ணிக்
கோதை கண்ணீர் மழையாற்
குளித்திடச் செய்திட்டாளே !

(116) போதரும் அன்பு வெள்ளம்
பொங்கிட ஐயன் பாதம்
ஆதரவோடு பற்றி அழுதழு(து)
அணைத்து முத்தி

(117) கார்முகிற் கூந்தல் சேர்த்து
கர்த்தரின் பாதம் நீவிப்
பேர்ந்திட மனமிலாது, சுகந்தப்
பேழையைத் திறந்து வார்த்து,

(118) பொன்னடிகள் மீது அவன்
பூசிப் பூசிக் கூசியதை
என்னவிதம் என்றிங்கே
எழுத்தில் வடித்திடுவேன் !

(119) பன்தியினுக் கணியானாள்
பரன்சுதனின் அருளுற்றாள்
முக்தி நில்ல யிவ்வுலகில்
முதற் பெற்றாள் மரியாளே !

(120) ஏவரிவள் போலே, ஏசு
பிரான், அருள் பெற்றார்?
'பாவமரி' யென்றவர்கள்
பார்த்துப் புனிதை யென்றார் !

(121) பரிமள தைலம் வார்த்துப்
பாதத்தை முத்தி செய்யும்
அரிவையைப் பார்த்து
ஈசன், அகமிக மகிழலானார்

(122) சீமோனே, இந்தச் சிறுபெண்
செய்வதறியாதந் நாள்
மாமோசமான, பாவ மயக்கினிலே
விழ்ந்தவள் தான் ...!

(123) விபசாரி என்றவளை
வேதபாரகர், பரிசேயர்
கல்லெறிந்து கொல்லக்
கருதியதும் உண்மைதான் !

(124) ஆனால் அவளென்னைக்
கண்டதுமே அழுதாள்
கனற்பட்ட மெழுகினைப்போல்
உள்ளுருகினநந்தாள், உணர்ந்தாள்,

(125) மகதலேனா மரியாள் வடித்த
கண்ணீரருவி
அகமும், புறமும் அவள்
புனிதையானதன்மை காட்டியதே !

(126) என்றுரைத்தார் ஏசுபிரான்
இனிதென்றான் சீமோனும்
கன்று மனமுடையார்கள்
" கணிகையிவளானாலும்;

(127) அற்புதங்கள் ஆற்றுகின்ற
அண்ணலது சேவடியைப்
பற்றியதால் இவளின்று
பத்தி வலைப்பட்டாளோ "!

(128) என்றெண்ணி அதிசயித்தார்;
" என்னருமை மரியாளே
சென்றுவா உன்றனது செயல்
பாவம் தீர்த்ததுகாண் !

(129) குன்றிட்ட விளக்கானாய்
குவலயத்து ஒளியானாய்
நன்றாக வாழ்ந்திருப்பாய்
நடந்திடு என் பாதையிலே !"

(130) ஏசுபிரான் வாழ்த்திடவே
ஏந்திழையும் பதமலரை
தேசுடையதாய் முத்தி
செய்தில்லம் சென்றனளே !

(131) பாவமெதுவானாலும்
பரமனது திருப்பார்வை
நோவன வெலாம் போக்கி
நோன்பிருக்கச் செய்திடுமால் !

(132) எண்ணிறந்த பெண்மணிகள்
இளையவர்கள், முதியோர்கள்
கண் திறந்தோராய் வந்தார்
கர்த்தர் திருத் தரிசனமே !

(133) ஊரெங்கும் ஏசுபிரான்
ஊரையொன்றே முழுங்கியது
பாரெங்கும் தேவசுதன்
பரிமளமே வீசியது...!

(134) ஆதிக்கம் செய்தவர்கள்
ஆண்டவர் தம் பெருமையினை
பாதிக்க வழிதேடிப்
பாதகமே செயலுற்றார் !

# உயிர்த்தெழுந்த இயேசு தரிசனம்

(135)

செம்பதும முகம் வேர்ப்பச்
சிலுவை சுமந்(து) ஏசுபிரான்
நம்ப முடியாதழுது
நல்லவர்கள் தேம்பிவரக்
கொம்பனையார் மடமாதர்
குழுமிநின்று அழுதரற்ற
அம்பவளவாய் திறந்துமரி
ஆண்டவரே, என்றழைக்க.

(136)

மனிதகுலப்பவந் தீர்க்க
மானிடனாய் வந்தவர்தாம்
தனிமனிதராக அன்று
தாம் சிலுவை தமைச்சுமந்து
புனித முறமனித குலம்
போகின்ற காட்சியினை
கனியுமருட்தியாகத்தின்
கடவுள் நிலை எனலாமா?

(137)

கூடியிருந்து களித்தவர்கள்
கும்பிட்டருள் பெற்றவர்கள்
வாடியிருந்திளைத்த பின்னர்
வள்ளல் அருளாற் செழித்தவர்கள்
கோடி கொடுத்தும் பெறற்கரிய
கோமான் குருசு சுமப்பதனை
நாடிவந்து பார்த்திட்டார்
நம்ப முடியாதீ தென்றார் !

(138) கடவுள் மகன்நான் என்றவரேன்
களைத்துச் சிலுவை சுமக்கின்றார்
இடமும் வலமும் சேவகர்கள்
இன்னல் விளைத்து வருகின்றார்
சுடரும் அருளார் திருக்குமரன்
சும்மா ஏனோ நடக்கின்றார்?
அட, இதென்ன அநியாயம்
அன்னா, காய்பா மாய்மாலம் !

(139) நீதி உலகில் மாண்டதுவோ
நேயன் சிலுவை சுமப்பதுவோ
ஆதிபரனின் மைந்தனுக்கேன்
அவலம் நேர்ந்து அயர்வதுவோ
சேதி எதுவும் தெரியவில்லை
சிடர் குழாமும் திகைத்தலறச்
சோதி பரனாம் ஏசுபிரான்
சுமந்து இளைத்தார் சிலுவையினை !

(140) வெள்ளிக்காசு முப்பதுக்காய்
வேந்தன் ஏசுதனைக்காட்டி
அள்ளிவைத்தான் யூதாசு
அவனுக்கென்ன நேர்ந்ததுதான்
புள்ளிமானைக் குதறுதல் போல்
புனிதர் ஏசுதனை வருத்தி
எள்ளி நகைத்தார் எதிரிகள்தாம்
ஏந்தல் இயேசு நொந்தமையால் !

(141) எச்சில் துப்பி அறைந்தார்கள்
ஈசன் புதல்வன் நீயென்றால்
நச்சியுன்னை இகழ்வாரை
'நாமம்' சொல்லியழையென்றார்
துச்சமாக நினைந்தார்கள்
தூஷித்தடித்துத் துவைத்தார்கள்
'தச்சன்' புதல்வன் நீயா, இத்
தரணி புரக்கும் அரசென்றார் !

(142) எம்மான் ஏதும் பேசவில்லை
இளைத்துக் களைத்து நடந்திட்டார்
பெம்மான் மௌனம் கண்டந்தப்
பெரியோன் சீடர் பயந்திருந்தார்
அம்மாதிரியோர் காட்சிதனை
அகிலம் என்றும் காணவில்லை
நும்மாதிரியோ, இறைமகனும்
நொடிப்பான் என்றார் சிலபேர்கள் !

(143) சிலுவைதன்னில் அறைந்தார்கள்
செந்நீர் பாயச் சிரித்தார்கள்
வலுவைக்காட்ட முடியுமெனில்
வருவாய் சிலுவை விட்டென்றார்
சொலுவைச் சேரக் குறித்த பிரான்
கொலைஞர் கொட்டந்தனைப்பார்த்து
அலகைபுதல்வர் ஆர்க்கின்றார்
'அப்பா, இவர்க்கும் அருளென்றார்' !

(144) கூடச்சிலுவை கொலையுண்டார்
குற்றமிழைத்த கொடியோர்கள்
தேடக்கிடையாத் தெய்வமகன்
திருடரோடும் உடனிருப்ப
மூடன் ஒருவன் அவர் முகத்தே
முதல்வன் புதல்வன் நீ யென்றால்
வாடலெதற்கு எம்மோடு வருவாய்
சிலுவை விட்டிறங்கி ...!

(145) பழித்துச் சொன்ன பாதகனைப்
பக்கத்திருந்த ஒரு கள்வன்
விழித்துப் பார்த்து வீண் வார்த்தை
வீசாதிருப்பாய், நாம் கள்வர்
கொழித்துப் புரளும் அருள்வெள்ளக்
கோமான் இவர்தாம், புரியாது
அழித்துக் கொண்டாய் நின்வாய்ப்பை
'ஐய, எனக்கு அருள்வீ' ரென்றான் !

(146) அவ்வாறாகும் அயராதே
அன்ப, இன்றே பரதீசில்
எவ்வாறேனும் என்னோடு
இருப்பாய் என்றார் ஏசுபிரான்
செவ்வாயுலர்ந்து நாவரண்டு
செல்லும்போது 'பிதாவே நும்
அங்கைதனிலே என்னாவியனடக
என்றே' அமைதியுற்றார்.

(147) வானம் இருண்டு புரண்டது
வையம் இருளில் மறைந்தது
ஈனமிலாதவர் செயல்களால்
இறையவன் ஆலயத்திரையெலாம்
ஊனமுற்று , இருகூறாயிற்று
உலகமுயிர்ப்பை யிழந்தது
தேனமுதாகிய ஈசனார்
தெய்வத்தவிசினில் மேவினார்.

(148) 'மாண்டனர்' இயேசு என்ற
செய்தி கேட்டயிர்த்தெல்லோரும்
ஈண்டினர் 'கொல்கொதாவை'
இறந்ததும் உண்மையென்றே
பூண்டநம்பிக்கையோடு
புகுந்தனர் இல்லம், நல்லோர்
ஆண்டவர் உடலைப் பெற்றாங்கோர்
கல்லறை சேர்த்துப் போனார் !

(149) அங்ஙனம் செய்தநல்லோர்
அரிமத்யா யோசேப்போடு
பங்கமில் குணத்தானான
பரிசேயன் நிக்கோதேமு
எங்கிருந்தாலும் ஏசு, ஏந்தல்
இறையுரை கேட்ட மாதர்
பொங்குவெங் கண்ணீர் சிந்திப்
போயினர்; வருவாரென்றே !

(150) நொந்தனர் சீடர், மக்கள்;
நோவிலர் அதிகாரத்தில்
சிந்தைவைத்தவர்கள்; இயேசு
'செத்தனன்' என்று சொன்னார்
வந்தனன் மூன்று நாளில்
வானிருந்தென்ற வேந்தல்
முந்தைய வாக்கை ஏற்று
மூன்றாம் நாளுயிர்த்து நின்றார் !

(151) ஐயன்றன் கல்லறையை அடைந்திட்டார் கன்னியர்கள்
செய்யதிருமேனி சிதையாது காப்பதற்கும்....பார்ப்பதற்கும்,

(152) மகதலேனா மரியாள் முதல்வந்தாள், மற்றையவரும் வந்தார்
அகமும், புறமும் ஆண்டவரே நிறைந்தமையால்

(153) மங்கையிவள் மரியாளின் மனமே நறுமணமாகும்
செங்கையிலே சுகந்தவர்க்கம் செம்மலர்கள் அர்ச்சிக்க

(154) கல்லறையைப் பார்த்தாள் கல்புரட்டப்பட்டிருக்க
நல்லாயன் பொன்னுடலைக் காணாது நடுக்க முற்றாள் !

(155) ஓடிப்போயச் சேதியினை உரைத்து விட்டுச்சீடரிடம்
நாடி விரைந்து வந்தாள் ஏசுநாயகனின் கல்லறைக்கு

(156) பேதுருவும் சீடர்களும் பின்னே தொடர்ந்து வந்தார்
ஏது நடந்ததுவோ, எப்படிக் கல்புரண்டதுவோ?

(157) கல்லறையினுள்ளேயும், வெளியேயும் பார்த்தலுத்து
'இல்லை இங்கு ஒன்று மிலை' யென்றே விட்டகன்றார்... !

(158) தீராத விசுவாசம், திடமான நம்பிக்கை, ஆராதகாதல் சோராத
பத்தியுள்ளம் கொண்ட மரியாளங்கே தரித்து நின்றாள்

(159) அழுதாள், தொழுதாள் ஆண்டவரே எங்குற்றீர்..? புழுவாய்த்
துடிக்கின்றேன் நும் பொன்னுடலைப் பார்ப்பதற்கு

(160) உள்ளிருந்து பெருகும் உணர்ச்சிப் பேரலைகளினால்
கள்ளவிழும் மலர்க்கூந்தற் கன்னி மகதலேனாவும்

(161) கல்லறையினுள்ளே கால்வைக்கத் துணியாமல்
மெல்லக் குனிந்துள்ளே பார்த்தாள்... பிரமித்தாள்

(162) நாயகனார் திருமேனி நல்லடக்கம் செய்தவிடம்
தூய தேவ தூதரிருவர் தொடர்ந்திருத்தல் கண்டிட்டாள்

(163) பரிதவித்த மரியாளைப் பார்த்தந்தத் தூதர்கள்
கரிசனையோ டேனம்மா கண்ணீர் உகுக்கின்றாய்...?

(164) என்றவர்கள் கேட்டார். இயேசு பிரான் முன்வந்தார்
கன்றிமனங்குன்றிக் கதறுதற்குக் காரணமென்....?

(165) என்றவருங்கேட்டார் ஏந்திழைக்குத் தெரியவில்லை;
மன்னன் என்றன் இயேசு மனிதவுடல் காணவில்லை

(166) 'எடுத்திருந்தீரானால்...அவரிட்டவிடம் கூறிடுவிர்
நடுக்கமுறவுள்ளம் நங்கை மரியாள் கேட்டாள் !

(167) 'மகதலேனா மரியாளே, இங்கேபார்' என்றார் ஏசுபிரான்
அகமும் முகமும் ஆச்சரியத்தாள் ஒளிர 'ரபீ' என்றாள் மரியர்ள் !

(168) பூத்து மலர்ந்த புதுப் பொலிவைக் கண்டிட்டாள்
அத்தனிருபாதம் அணைய முயன்றிட்டாள்....!

(169) என்னைத் தொடாதே ஏந்திழையே, யானின்னும்
என் பிதாவினிடம் செல்லவில்லை; ஆதலினால்

(170) சோதரரிடம் சென்று சொல்வாய் நீ கண்டவற்றை
போதகர் தம்பிதாவினிடம் போகின்றார் எனக் கூறு !

(171) இனிமேல் எங்கும் இருப்பேன், எப்பொழுதுமிருப்பேன்
பனிசிலிர்க்கும் உன்னுள்ளப் படுதாவிலுமிருப்பேன்.

(172) இறப்பும் பிறப்பும் இனி என்றனுக்கேயில்லை
துறக்கம் புகுவேன் தூாருடனும் வருவேன்.

(173) மண்ணுக்கும் விண்ணுக்கும் மன்னன் யான்
பெண்களுக்குள் பெரும்பேறு பெற்றிட்ட மரியாளே !

(174) விண்ணகம் செல்வேன், விரைந்து வந்திடுவேன்
மண்ணகத்து என்சீடர் மனங்குளிரக்கண்டிடுவார்

(175) என்றுரைத்து இயேசுபிரான் எழுந்தருளினார் விண்ணில்
தென்றல் நிகர்த்த மரிசேதி சொல்லச் சென்றிட்டாள் !

(176) ஆர்க்குங்கிடையாத ஆண்டவரின் உயிர்த்தெழுதல்
பார்க்கும் முதற்பேறு பாக்கியத்தாலவள் பெற்றாள்

(177) பக்தியினால் எந்தப் பயனையும் பெற்றிடலாம்
இக்கணமே தேவதையாள் எழுந்திடவுந்தான் முடியும்

(178) மகதலேனா மரியாள் மானிடத்தின் வரலாற்றில்
புகலொண்ணாப் புனிதையவள் பொற்பாதம் வாழியரோ !

(179) வானிருந்து வந்து மானிடத்தைத்
தூய்மை செயக்
கானிருந்து நோற்றுக்
காலமெலாம் நற்செய்தி
தேனிருந்த பொதும்பரெனத்
திகழ் இயேசுபிரானருளால்
மானிருந்தாள் மகதலேனா
மரியாள் பேர் வாழியவே !

(180) மண்ணவர் விண்ணவர் வாழ்த்தினர்
எண்ணிலர், ஏதிலர் எவரும் போற்றினர்
பண்ணொடு நல்லிசை பாடினர், ஆடினர்
தண்ணருள் ஏசெனும் சற்குரு பாதமே !

***********
*********